

## செங்கிப்பட்டி அரசு என்ஜினீயரிங் கல்லூரியில்

# மாணவ-மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை போட்டி

தஞ்சாவூர்,ஜூலை.12-

தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் செங்கிப்பட்டி அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் மாணவ-மாணவிகளுக்கு இடையே கல்லூரி அளவிலான தமிழ் சார்ந்த கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடந்தது. இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர். வெற்றியாளர்களை பல நடுவர்கள் கொண்ட பேராசிரியர் குழுவின் மூலம்தேர்வு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.5 ஆயிரம், 2-ம் பரிசாக தலா ரூ.3 ஆயிரம், 3-ம் பரிசாக தலா ரூ.2 ஆயிரம் என்ற விகிதத்தில் மூன்று போட்டிகளுக்கும் மொத்தமாக ரூ.30 ஆயிரம் கல்லூரியின் மூலம் வழங்கப்பட்டது. இந்த விழாவிற்கு கல்லூரி முதல்வர் சு. ஜெயபால் தலைமை தாங்கினார். விழாவில் ஏராளமான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை தமிழ் வளர்ச்சித் துறை பொறுப்பாளர் கலைமதி செய்திருந்தார்.